# MUSLIM WOMEN AND POLITICAL REPRESENTATION: A RESEARCH ON 2018 GALLEWALLA LOCAL GOVERNMENT ELECTIONS

**J.F. Nazeera (1), A.P.M. Fasan (2), A.S. Lasmiya (3)**

[1]Department of Sociology, Faculty of Arts And Culture ,South Eastern University of Sri Lanka , [2]Department of Geography, Faculty of Arts And Culture ,South Eastern University of Sri Lanka [3]Department of Sociology, Faculty of Arts And Culture ,South Eastern University of Sri Lanka. nazeera19941118@gmail.com, fasanmh6@gmail.com, as19940704@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

இன்றைய ஜனநாயக முறைமையில் பிரதிநிதித்துவம் என்ற எண்ணக்கரு முக்கியமானதொரு அம்சமாக காணப்படுகின்றது. பிரதிநிதித்துவம் என்பது மக்கள், அரசாங்கம் செயற்படுவதற்கான அனுமதியை தங்களில் இருந்து தெரிவாகும் அங்கத்தவர்கள் ஊடாக வெளிப்படுத்துவதை குறிக்கிறது. இது பிரதேச, பிராந்திய மற்றும் தேசிய மட்டங்களில் காணப்படுவதுடன் ஆண், பெண் இரு பாலாரினையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. உள்ளூராட்சி மன்றமானது மத்திய அரசினால் வழங்கப்பட்ட வரையறுக்கப்பட்ட அதிகாரங்கள் மூலம் மக்களினால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளை கொண்டமைந்த அதிகாரக் கட்டமைப்பாகும். 2017ம் ஆண்டு 16ம் இலக்க திருத்தச்சட்டத்தின் மூலம் புதிய தேர்தல் முறைமை அறிமுகப்படுத்தப்பட்டு பெண் பிரதிநிதித்துவம் 25% காணப்பட வேண்டும் என்ற சட்ட விதிக்கமைய ஆய்வுப்பிரதேசமான கலேவெல பிரதேசத்தின் உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் முஸ்லிம் பெண்களின் பிரதிநிதித்துவத்தினை பரீசீலிக்கும் வகையில் இவ் ஆய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ் ஆய்வானது கலேவல பிரதேசத்தில் சகோதர மதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பெண் பிரதிநிதிகள் காணப்படுகின்ற போதிலும் கூட எந்தவொரு முஸ்லிம் பெண் பிரதிநிதித்துவமும் இப் பிரதேசத்தில் இல்லை என்பதனை ஆய்வுப்பிரச்சினையாகக் கொண்டும், இப்பிரதேசத்தில் முஸ்லிம் பெண்களின் பிரதிநிதித்துவம் இன்மைக்கான காரணங்களைக் கண்டறிவதை நோக்கமாகக் கொண்டும் வடிவமைக்கப்பட்டுள்ளது. இது முதலாம் மற்றும் இரண்டாம் நிலை தரவு சேகரிப்பு முறைகளைப் பயன்படுத்தி அளவுசார் மற்றும் பண்புசார் ஆய்வு முறைகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்காக வினாக்கொத்து (50), நேர்காணல், இலக்குக்குழு கலந்துரையாடல்கள் பயன்படுத்தப்பட்டன. இவ்வாய்வின் பெறுபேறுகளாக உளவியல், சமய, பொருளாதார மற்றும் குடும்ப சூழல், சிறுபான்மையினராக காணப்படுகின்றமை என்ற மனோநிலை, முஸ்லிம் காங்கிரஸ் கட்சியினை தவிர ஏனைய கட்சிகளில் பிரதிநிதியாக போட்டியிட சந்தர்ப்பம் வழங்கப்படாமை போன்ற காரணங்களினால் முஸ்லிம் பெண்களின் பிரதிநிதித்துவமும் அரசியல் பங்குபற்றலும் இல்லை என கண்டறியப்பட்டது. இவ்ஆய்வு முஸ்லிம் பெண்களின் பிரதிநிதித்துவத்தினை அதிகரிப்பதற்கான ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் முன்வைப்பதாகவும் எதிர்காலத்தில் இவ்வாறானதொரு ஆய்வினை மேற்கொள்வோருக்கு வழிகாட்டியாகவும் அமைகின்றது.

**திறவுச் சொற்கள்:** முஸ்லிம் பெண்கள், பிரதிநிதித்துவம், உள்ளூராட்சிமன்றம், சிறுபான்மையினர்

**ஆய்வு அறிமுகம்**

நாட்டின் ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதில் தேர்தல்கள் இன்றியமையாததாக காணப்படுகின்றது. தேர்தலில் பிரதிநிதித்துவம் மூலமே ஜனநாயகம் உறுதிப்படுத்தப்படுகின்றது. பிரதிநிதித்துவம் என்பது மனோபாவம், நோக்கு, முன்னுரிமை மற்றும் விருப்பம் என்பனவற்றின் வழியாக பொதுமக்கள் அனைவரும் அரசாங்கம் செயற்படுவதற்கான அனுமதியினை வழங்குவதைக் குறிக்கிறது.

இலங்கையில் பிரதிநிதிகளை தெரிவு செய்வதில் ஜனாதிபதி தேர்தல், பாராளுமன்றத் தேர்தல், மாகாண சபைத் தேர்தல் மற்றும் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் என நான்கு முறைகள் காணப்படுகின்றன. இலங்கையில் பெண்களின் சனத்தொகையானது 51.86% காணப்படுகின்றது (Gender statistics - 2016). இருப்பினும் பாராளுமன்ற பிரதிநிதி தெரிவில் 2015ம் ஆண்டு 13 பெண் பிரதிநிதிகளே தெரிவுசெய்யப்பட்டுள்ளனர் (Hand book of parliament 2017). இதன் அடிப்படையில் மொத்த பிரதிநிதிகளின் விகிதாசார அடிப்படையில் பெண் பிரதிநிதிகளின் விகிதாசாரமானது 6% குறைவாகவே காணப்படுகின்றது. 2014ம் ஆண்டு இலங்கை தேசிய மானிட அபிவிருத்தி அறிக்கைப்படி (NHDR), இலங்கையில் 2018ம் ஆண்டு பாராளுமன்ற பெண் பிரதிநிதித்துவம் 5.8% ஆகவும் நேபாளத்தில் 33.2% ஆகவும் , பங்களாதேசில் 19.7% மற்றும் இந்தியாவில் 10.9% ஆகவும் காணப்படுவதோடு இலங்கையிலேயே மிகவும் குறைவான பெண் பிரதிநிதித்துவம் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

1931ம் ஆண்டு பிரித்தானிய காலனித்துவத்திற்குட்பட்டிருந்த நாடுகளில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கிய முதலாவது நாடாக இலங்கை காணப்படுகின்றது. உலகிலுள்ள நாடுகளின் பாராளுமன்றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவம் தொடர்பாக தரப்படுத்தும் போது இலங்கை 177வது இடத்தில் உள்ளது. இன்றுவரை உள்ளூராட்சி மன்றத்தில் 1.8% என்ற பெண் பிரதிநிதித்துவமே காணப்படுகின்றது (Parliament union -2016). இந் நிலமையிமையினை மாற்றியமைக்கும் முகமாக 2017ம் ஆண்டு 16ம் இலக்க சட்டத்தின் மூலம் உள்ளூராட்சி சபைகளுக்கான புதிய தேர்தல் முறை அறிமுகப்படுத்தப்பட்டதில் பெண்களுக்கு 25% இட ஒதுக்கீடு கட்டாயமாக காணப்பட வேண்டும் என உறுதிப்படுத்தப்பட்டுத (Keshala Dias- 2018 March,16).

இலங்கையில் கொண்டுவரப்பட்ட 16ம் இலக்கச்சட்டத்தின் மூலம் உள்ளூராட்சி சபைகளுக்கான திட்டங்களில் 60% வட்டாரங்களின் தொகையினையும் 40% மேலதிக அங்கத்தவர் தொகையினையும் கொண்டு தீர்மானிக்கப்படும் எனவும் வட்டாரங்களின் தொகை 12 காணப்படுமாயின் அதில் குறிப்பிடப்படும் 40% எனும் அளவானது அங்கத்தவர்களில் 8 பேரினை சேர்த்து மொத்தமாக 20 அங்கத்தவர்கள் என்ற அடிப்படையில் சபையில் அமர வேண்டும். முதலாவது வேட்பு மனுப் பத்திரம் வட்டாரத்தின் வேட்பாளர்களின் பெயர் குறித்து நியமிக்க வேண்டும். இவர்களுள் 10 பெண்களின் பிரதிநிதித்துவம் காணப்பட வேண்டும் என கூறப்பட்டுள்ளது. இரண்டாவது வேட்பு மனுப்பத்திரத்தில் விகிதாசார முறையில் தெரிவு செய்யப்பட்ட 40 உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு சமமான எண்ணிக்கையுடைய நபர்களுக்கு மேலதிகமாக 03 நபர்கள் சேர்க்கப்பட வேண்டும். இவர்களில் 50 பெண்கள் கட்டாயமாக இருக்க வேண்டும் என உதாரணம் காட்டி கூறப்படுகிறது (Ministry of provincial, local government and sports).

ஆய்வுப்பிரதேசமான மாத்தளை மாவட்டத்தின் கலேவெல பிரதேச செயலக பிரிவின் கீழ் 59 கிராம சேவகர் பிரிவுகளில் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். மொத்தமான 69,715 மக்கள் தொகையில் முஸ்லிம்கள் 9,427, பௌத்தம் 56,201, கத்தோலிக்கம் 3,215, இந்து 872 என்ற அடிப்படையில் பன்மைத்துவம் கொண்ட சமூகக் கட்டமைப்பிற்குள் வாழ்கின்றனர் (பிரதேச செயலக குடிசன மதிப்பீட்டு அறிக்கை, 2015). உள்ளூராட்சிமன்ற தேர்தலில் 28 பிரதிநிதிகள் தேர்வில் 17 பேர் தேர்தல் வாக்கெடுப்பு மூலமும் 11 பேர் விகிதாசார் அடிப்படையிலும் இடம்பெற்றது. தேர்தலில் வாக்களிக்க தகுதியுடையவர்கள் 46,449 ஆகவும், ஆண்கள் 35,052, பெண்கள் 34,663 என்ற அடிப்படையில் காணப்படுகின்றனர். கடந்த 2018 பெப்ரவரி 10 இல் நடைபெற்ற உள்ளூராட்சிமன்ற தேர்தலின் முடிவுகளின் படி, SPJP இல் 14 பிரதிநிகளும் UNPயில் 3 பேர் தேர்தல் மூலமும் 6 பேர் விகிதாசாரம் மூலமும் தெரிவு செய்யப்பட்டனர். மேலும் விகிதார அடிப்படையில் SLFPயில் 3 பிரதிநிதிகளும் JVPயில் 1 பிரதிநிதியும் SLMC யில் 1 பிரதிநிதியுமாக மொத்தம் 28 பேர் தெரிவு செய்யப்பட்டனர். இத்தேர்தலின் முடிவில் மொத்தமாக SPJP சார்பில் 2 பெண்ணும் UNP சார்பில் 3 பெண்களும் SLFP சார்பில் 1 பெண்ணுமாக மொத்தம் 5 பெண்களே தெரிவு செய்யப்பட்டனர். இவ் 5 பெண்களும் பௌத்த மதத்தினை பிரதிநிதித்துவப்படுத்துபவர்களாவர் (மாத்தளை மாவட்ட கச்சேரி, தேர்தல் பிரிவு –2018).

இதில் SLMC சார்பாக 4 முஸ்லிம் பெண்கள் தேர்தலில் போட்டியிட்டிருந்தும் அவர்கள் எவரும் தெரிவாகவில்லை. 2018ம் ஆண்டு உள்ளூராட்சி தேர்தலில் 28 பிரதிநிதிகளில் முஸ்லிம் பெண் பிரதிநிதி ஒருவர் கூட தெரிவு செய்யப்படாமையானது முஸ்லிம் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தினையும் நேரடி பங்குபற்றலினையும் கேள்விக்குறியாக்கியுள்ளது. எனவேதான் 2018ம் ஆண்டு கலேவெல உள்ளூராட்சி மன்றத்தேர்தல் முடிவுகளை அடிப்படையாகக் முஸ்லிம் பெண்களின் பிரதிநிதித்துவம் தொடர்பாக இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ஆய்வுப் பிரச்சினை**

2017ம் ஆண்டு 16ம் இலக்க சட்டத்தின் மூலம் உள்ளூராட்சி மன்ற புதிய தேர்தல் முறை அறிமுகப்படுத்தப்பட்டதில் பெண்களுக்கு 25% இட ஒதுக்கீடு உறுதிப்படுத்தப்பட்டிருப்பினும் கூட பெண்கள் பிரதிநிதித்துவத்தில் எதிர்பார்த்த அடைவினை இத்தேர்தல் முடிவகள் வெளிப்படுத்தவில்லை. ஏனைய பகுதிகளை விட கலேவேல உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் முஸ்லிம் பெண்களின் பிரதிநிதித்துவம் காணப்படவில்லை. இலங்கையில் ஆரம்ப காலங்களை விட தற்காலத்தில் பெண்களின் அரசியல் பங்குபற்றுதலுக்கு சாதகமான அரசியல் சீர்திருத்தச் சட்டங்கள் கொண்டுவரப்பட்டிருக்கின்ற போதிலும் ஏன் கலேவல உள்ளூராட்சி மன்றத்தேர்தலில் முஸ்லிம் பெண்களின் பிரதிநிதித்துவம் இல்லாமல் போயுள்ளது என்பதை ஆய்வுப் பிரச்சினையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ஆய்வின் நோக்கம்**

கலேவல பிரதேச சபையின் கீழ் அமைந்துள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் முஸ்லிம் பெண்களின் பிரதிநிதித்துவம் இன்மைக்கான காரணங்களை கண்டறிதல்.

**ஆய்வு முறையியல்**

இவ் ஆய்விற்காக பண்பு சார் ஆய்வு முறை மற்றும் அளவு சார் ஆய்வு முறை பயன்படுத்தப்படவுள்ளது. முதலாம் மற்றும் இரண்டாம் நிலை தரவுகள் சேகரிக்கப்பட்டு இவ்வாய்விற்கான முடிவுகள் பெறப்பட்டுள்ளன. முதலாம் நிலைத்தரவுகள் எழுமாற்று அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு 25 முஸ்லிம் பெண்கள் மற்றும் 15 முஸ்லிம் மதத் தலைவர்களிடமிருந்து நேர்காணல் மூலமாகவும் எழுமாற்று அடிப்படையில் வினாக்கொத்து (50) வாயிலாகவும் பொதுமக்கள் 12 பேரினை உள்ளடக்கிய இலக்குக் குழுக் கலந்துரையாடல் (03) மூலமும் தரவுகள் திரட்டப்பட்டுள்ளன. இரண்டாம் நிலைத்தரவு சேகரிப்பு முறையில் கலேவெல பிரதேசத்துடன் தொடர்புடைய ஆவணப்படுத்தப்பட்ட புள்ளி விபர அறிக்கைள், பிரதேச செயலகத்தினுடைய வருடாந்த அறிக்கைகள, தேர்தல் பிரிவினது 2018ம் ஆண்டு முடிவுகள் உட்பட நூல்கள், சஞ்சிகைகள், ஆய்வுக் கட்டுரைகள் என்பன ஆய்வின் தேவைக்கு ஏற்ப பயன்படுத்தப்பட்டு தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

**ஆய்வின் பெறுபேறுகள்**

இவ்வாய்வானது 2018 உள்ளூராட்சி மன்ற தேர்தலில் முஸ்லிம் பெண்களின் பிரதிநிதித்துவமின்மையும் அதற்கான காரணங்களையும் கண்டறியும் வகையில் மேற்கொள்ளப்பட்டதற்கு இணங்க ஆய்வின் இறுதியில் பல்வேறு பெறுபேறுகள் கிடைக்கப்பெற்றன.

பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டதனைத் தொடர்ந்து முஸ்லிம் பெண்களின் பங்களிப்பானது இப்பிரதேசத்தில் மறைமுகமாவே தாக்கம் செலுத்தியுள்ளது. தேர்தலின் போது மட்டும் அரசியல் விடயங்களை வீட்டில் இருந்து கொண்டு குடும்ப உறுப்பினர்களுடன் கலந்தாலோசித்தல், குடும்பத்தினருடைய சார்பு கட்சிகளுக்கு தனது விருப்பினை வழங்க பழக்கப்படுதல், அரசியல் கட்சிகளுக்கு ஆதரவு தெரிவித்தல் , தேர்தலின் போது சாதகமான மனப்பாங்கினை ஒரு கட்சியின் மேல் கொண்டிருத்தல், சிறு கூட்டங்கள் நடாத்துவதற்கு தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்ளல், தனது அயல் வீடுகளில் உள்ளவர்களை ஒன்று திரட்டி கூட்டங்களிற்கு அழைத்தல் என்பவற்றுடன் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

> (நேர்காணல்) ''நாங்கள் எங்களுடைய வீடுகளில் பெண்களுக்கான கூட்டங்களினை நடாத்த அதற்கு ஏற்ற வசதிகளை மேற்கொண்டு கொடுத்தல் போன்றன மூலமாக தேர்தல் காலங்களில் உதவிகளை கட்சிகளுக்கு வழங்குகின்றோம''.

இது அரசியலின் இப்பிரதேச பெண்களது பங்களிப்பினை எடுத்துக்காட்டுகிறது. இது ஏனைய சமூத்தினை சேர்ந்த பெண்களின் பங்களிப்பு போன்று சாதாரணமாகவே காணப்படுகின்றதே தவிர இவற்றில் எவ்வித முன்னேற்றங்களையும் காணமுடியாதுள்ளது. குறிப்பாக கலேவெல பிரதேசத்தினை சேர்ந்த முஸ்லிம் பெண்களாக இருந்தாலும் சரி வேறு மதத்தினை சேர்ந்த பெண்களாக இருந்தாலும் சரி அவர்களது மறைமுக பங்களிப்பு ஆரம்பம் முதல் இன்று வரை காணப்படுகின்றது குறிப்பிடத்தக்கது.

கடந்த 2018 உள்ளூராட்சிமன்ற தேர்தலில் இப்பிரதேச முஸ்லிம் பெண்கள் முதன் முறையாக தேர்தலில் பிரதிநிதித்துவத்திற்காக போட்டியிட்டுள்ளனர் என்பது முக்கிய விடயமாக கருதப்படுகின்றது. இதற்கு முற்பட்ட காலங்களில் இடம்பெற்ற ஒரு தேர்தலில் கூட முஸ்லிம் பெண்கள் போட்டியிடவில்லை. இருப்பினும் 25% பெண் பிரதிநிதித்துவம் என்ற சட்டமூலம் உறுதிப்படுத்தப்பட்டதனாலேயே முஸ்லிம் பெண்கள் போட்டியிட்டுள்ளனர். குறிப்பாக SLMC கட்சி தவிர வேறு எந்த ஒரு கட்சிகளிலும் முஸ்லிம் பெண் வேட்பாளர்கள் போட்டியிடவோ பட்டியலின்

பெயர் குறிப்பிடப்படவோ சந்தர்ப்பம் வழங்கப்படுவதில்லை என்பது கண்டறியப்பட்டது. இப்பிரதேசத்தில் 04 பெண் வேட்பாளர்கள் போட்டியிட்டும் ஒருவர் கூட உள்ளூராட்சி மன்றத்திற்கு தெரிவு செய்யப்படாமையானது அப்பிரதேச மக்கள் அரசியலில் எந்தளவு ஈடுபாடுள்ளவர்கள் என்பதனை காட்டிநிற்கிறது. இப்பிரதேசத்தில் முஸ்லிம் பெண்கள் தேர்தலில் போட்டிவதானது கடுகளவும் சாத்தியமற்ற விடயமாகவும் இதனால் பல்வேறு சவால்களை எதிர்கொள்ள நேரிடும் என்ற அச்சம் இயல்பாகவே காணப்படுவதை அவதானிக்க முடிந்தது

பொதுவாக இப்பிரதேசத்தில் வாழும் பெண்கள் ஏனைய சமூகத்துடன் ஒன்றிணைந்து வாழ்கின்றனர். 28% மான கருத்துக்களின்படி, ஏனைய பிரதேசங்களில் முஸ்லிம் சிங்களவர்கள் என்ற இரு இனங்களிடையேயான பிரச்சினைகள் எழுவது போன்று எமது பிரதேசத்திலும் ஏற்பட்டு விடுமோ என்ற பய உணர்வினை பெற்றோர்கள் ஆரம்பத்திலிருந்து ஊட்டி வளர்த்துள்ளனர். அரசியலில் ஒரு முஸ்லிம் ஆணுடைய பங்குபற்றலே சவாலாக உள்ள நிலையில் பெண்களுக்கு சாத்தியமாகாது, உயிரினை இழக்க வைக்கும் அளவிற்கு மாற்றிவிடும் என்ற குடும்பத்தவர்களின் கருத்துக்களால் பெண்கள் தேர்தலில் போட்டியிட விரும்புவதில்லை. பெண்கள் அரசியலில் ஆணாதிக்கம் மிக்க சமூகத்திலேயே வாழ்ந்து வருகின்றனர். இவர்களை வெற்றிகொண்டு முன்னிலைக்கு செல்வதானது பாரிய சவாலாக காணப்படுகின்றது.

ஏனைய சமூகத்தினை சேர்ந்தவர்களால் கேலிக்குள்ளாக்கப்படல், தேவையற்ற வார்த்தைகளால் பேசுதல், பிறரின் அச்சுறுத்தல்களுக்கு பயப்பிடல், வெளியூர்களில் இடம்பெறும் வன்முறைகள் மற்றும் அதனது தாக்கங்களினை எண்ணி அது தங்களுக்கும் ஏற்பட்டுவிடுமோ என்ற பதற்றத்தினாலும் இப்பிரதேச முஸ்லிம் பெண்களுக்கு அரசியல் மீதான நேரடி பங்களிப்பு இல்லாமல் போகின்றது என்று ஆய்வின் மூலம் பெறப்பட்டன. மனித செயற்பாடுகளை பொறுத்தவரையில் எந்தவொரு செயற்பாடும் அவர்களது மனநிலையிலேயே தங்கியுள்ளது. உளமானது முழுமையாக ஒத்துழைப்பு வழங்கினால் மாத்திரமே எமது வேலையை முழுமையாக செய்ய முடியும். அது போன்றுதான் கடந்த உள்ளூராட்சிமன்ற தேர்தலில் கலேவெல முஸ்லிம் பெண்கள் போட்டியிடுதலில் எதிர் நோக்கிய மற்றொரு சவாலாக அவர்களுடைய உளப்போராட்டத்தினை எடுத்துக் கூறுகின்றனர்.

குழுக்கலந்துரையாடல்களின் பகுப்பாய்வின்படி, 14% மான பெண்களின் கருத்தானது அரசியலின் போட்டியிடும், கட்சிகளில் உறுப்பினராக காணப்படும் பெண்களுக்கு இச்சமூகம் கூறும் கேவலமான அவப்பெயர் தங்களுக்கும் ஏற்பட்டுவிடுமோ என்ற பயம், பிறர் தங்களைப் பற்றி என்ன எண்ணுகிறார்கள் என்ற மனக்குழப்பம், உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுவிடுமோ என்ற பதற்றம், தேர்தலில் போட்டியிட்டு வெற்றியடையாவிட்டால் ஏற்படும் வெட்கம், அதிகமாக பௌத்தமதத்தினை சார்ந்த பெண்களே போட்டியிடுகின்றமை, இதில் தங்களுக்கு வாக்குகள் கிடைப்பது சாத்தியமல்ல போன்ற உளவியல் மனப்பாங்கு முதலான காரணங்களினாலும் முஸ்லிம் பெண்கள் பல சவால்களை கலேவெல பிரதேசத்தில் எதிர்நோக்குகின்றார்கள் என்று பகுப்பாய்வின் முடிவில் தெரிய வருகின்றது.

மனித வாழ்வில் பிறப்பு முதல் இறப்பு வரை பங்கெடுக்கும் ஒரு பகுதியாக பொருளாதாரம் காணப்படுகின்றது. உண்ணுகின்ற உணவாக இருந்தாலும் சரி குடிக்கின்ற நீராக இருந்தாலும் சரி தங்களால் பணம் கொடுத்தே வாங்க வேண்டிய நிலை காணப்படுகின்றது.

> (நேர்காணல்) " சில இடங்களிற்கு செல்லவும் கூட்டங்களில் பங்குபற்றவும் விளம்பரங்களை காட்சிப்படுத்தவும் மக்களுக்கு கூட்டங்களின் போது சிற்றூண்டிகளை வழங்கவும் தனது சொந்த பணத்தில் செலவுகளை மேற்கொள்ள வேண்டிய தேவை ஏற்படுகின்றது. ஆனால்

அதற்கு ஏற்ற வகையிலான வசதி தேர்தலில் ஆர்வம் கொண்ட எவரிடமும் இல்லை என்றும் குறிப்பிட்டார்”

சில பெண்களுக்கு ஆர்வம் இருந்தும் பொருளாதார வசதி இல்லாமையாலும், தேர்தலில் போட்டியிட நாடியும் செல்வாக்கு இல்லாத காரணத்தால் வாய்ப்புகள் நழுவவிடப்படுகின்றன. சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்தில் இருக்கும் பெண்களைத்தான் கவனம் செலுத்துகிறார்களே தவிர திறமைக்கு முன்னுரிமை வழங்கப்படுவதில்லை. இதுபோன்ற கருத்துக்களைக் கூறி 14% மான கலேவெல பிரதேச முஸ்லிம் பெண்கள் அரசியலில் நாட்டமில்லை என்கின்றனர்.

இவ்வாறான காரணங்கள் தொடர்ந்தும் சமூகத்தில் வேரூன்றிக் காணப்படுவதனால் முஸ்லிம் பெண்கள் தேர்தலில் போட்டியிடுவது என்பது கேள்விக்குரிய விடயமாகவே உள்ளது. இவற்றிலிருந்து முஸ்லிம் சமூகத்தினை வளப்படுத்தி எடுக்க வேண்டிய தேவை உள்ளதாக கலந்துரையாடலின் போது பொதுமக்கள் அபிப்பிராயம் தெரிவித்தனர்.

**முடிவுரையும் பரிந்துரையும்**

அரசியல் செயற்பாடு எனும் போது முதலில் அனைவருக்கும் தெரியவருவது தேர்தல் முறைமை தான். குறிப்பாக கடந்த உள்ளூராட்சிமன்ற தேர்தலில் இது வரையில் எந்த ஒரு முஸ்லிம் பெண்களும் போட்டியிடவில்லை. ஆனால் இவ்வருடம் இடம்பெற்ற தேர்தலில் முதல் முறையாக 4 முஸ்லிம் பெண்கள் போட்டியிட்டனர். ஏனைய பிரதேசங்களில் ஒரு சில பெண்கள் தேர்தலில் போட்டியிடுகின்ற போதிலும் கலேவெல பிரதேசத்தில் மாத்திரம் முஸ்லிம் பெண் பிரதிநிதித்துவமானது இல்லாமலேயே காணப்படுகின்றது. இதனடிப்படையில் 59 கிராம சேவகர் பிரிவுக்கு உட்பட்ட பெண்களிடம் இந்நிலைமை தொடர்பான காரணங்களை கண்டறிய கலந்துரையாடல் மற்றும் நேர்காணல் இடம்பெற்ற போது அவர்கள் பின்னடைவில் இருப்பதற்கான காரணங்களை குடும்ப, சமூக, பொருளாதார, உளவியல் மற்றும் சமய ரீதியான வகையில் எடுத்துக்காட்டினர். இப்பிரதேசம் தனியான முஸ்லிம்கள் வாழாமல் பௌத்தம், இந்து, கிறிஸ்தவ மக்களுடன் இணைந்தே வாழ்கின்றனர். இவற்றில் முஸ்லிம் பெண்களின் பங்குபற்றலும் பிரதிநித்துவம் கிடைப்பது என்பதும் சாத்தியமற்ற விடயமாகவே உள்ளது. இருப்பினும் இந்நிலைமையினை பெண் சமூகம் மத்தியில் மாற்றியமைக்க வேண்டியுள்ளது.

மேலும் தேர்தலில் போட்டியிட முன்வரும் பெண்களுக்கு மகளிர் அமைப்புக்கள் மற்றும் சிவில் அமைப்புக்கள் தங்களது ஆர்வத்தை வழங்க முன்வருதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். மேலும் மதத் தலைவர்கள் தங்கள் சார்பாக போட்டியிடும் பெண்ணுக்காக பிரச்சார கருத்துக்களை சமூகத்திற்கு முன்வைக்க முன்வர வேண்டும். மேலும் தேர்தலில் ஆர்வமுள்ளவர்களுக்கு தொண்டு நிறுவனங்கள் நிதி உதவியினை வழங்கி உதவ வேண்டும்.

அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற புதிய சட்டமூலங்கள் மூலம் உள்ளூராட்சிமன்ற தேர்தலில் பெண்களின் கட்டாய பிரதிநிதித்துவத்தினை வலியுறுத்தினாலும் அதை நடைமுறைப்படுத்துவதில் உள்ள சவால்களை கண்டறிந்து அவற்றை தீர்ப்பதற்கான வழிகளை எடுத்துக்காட்ட வேண்டியுள்ளது. வெறுமனே சட்டம் கொண்டு வந்தாலும் அதை நிலை நாட்டுவதிலேயே உண்மையான வெற்றி தங்கியுள்ளது. முஸ்லிம் பெண்களுக்கு தேர்தலின் முக்கியத்துவம், பங்குபற்றுவதில் உள்ள அவர்களது உரிமைகளை எடுத்துக்காட்டும் வகையில் விழிப்புணர்வுகளை ஊட்ட வேண்டியுள்ளது. அரசியல் என்பது ஆண்களுக்கு மட்டுமானது என்ற கருத்தினை விட்டு பெண்களுக்கும் சம உரிமையுள்ளது என்று தெளிவுபடுத்த வேண்டிய தேவையுள்ளது. குறிப்பாக முஸ்லிம் கட்சிகளில்

மாத்திரம் வாய்ப்பு வழங்காமல் ஏனைய கட்சிகளிலும் சமவாய்ப்பினை வழங்க வேண்டிய தேவையுள்ளது. இவ்வாறான தேவைகளை நிறைவேற்றும் போது கலேவெல பிரதேசத்தினை சேர்ந்த முஸ்லிம் பெண்களது அரசியல் பங்குபற்றலினை மெருகூட்டுவதற்கு வாய்ப்பாக அமையும்.

**உசாத்துணைகள் நூல்கள்**


Mairo Gomeez and Shymala Geomez**,** (2001**).** Gender and politics in Sri Lanka preferring Women. Colombo; Canadian International Development Agencies.

கிஷர்சாலி மன்றோ, ஜெயவர்த்தன, சூழனி கொடிக்கார. (2003). இலங்கையில் பெண்களும் ஆட்சிமுறையும். இனத்துவ கற்கைக்கான மோதல் நிலையம்.

சரவணன். என். (2007).இலங்கை அரசியலில் பெண்களும் பெண்கன் அரசியலும். கொழும்பு மூன்றாவது பதிப்பகம்.

இலங்கையில் உள்ளூராட்சி ஓர் அறிமுகம் .தென்னாசிய ஒத்துழைப்பு அமைப்பு. இலங்கை.

இர்பான்.எம்.ஐ.எம். இலங்கையில் பெண்களின் அரசியல் பங்களிப்பும் அவர்கள் எதிர்கொள்ளும் சவால்களும், அரசியல் கட்சிகளில் பெண்களின் நிலையும். களவெட்டி. தமிழ்ச் சங்கம். இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம்.

Kiribamune,Simra , (1999).women and politis in sri lanka.publications ICES, Colombo.

தேவ கௌரி.எம். (2016). சொல், பெண்கள் மற்றும் ஊடக கூட்டமைப்பு. கொழும்பு.


**இணையத்தளம்**


http;//www.parliament.lk / hand book of parliament lady members. Retrieved from 15 September 2014

www.genderequalityonline.org Retrieved from 15 November 2014

www.thesundayleader.lk/2012/04/14.sri-1 Retrieved from 22 November 2014

www.ipu.org Retrieved from 22 November 2014

இலங்கை உள்ளூராட்சி சபை தேர்தலில் பெண்களின் 25 சதவீத இட ஒதுக்கீடு.( 25 August 2017). Retrieved from http;//www.bbc.com


**நேர்காணல்கள்**


பாத்திமா ஜர்யிசா, நமடகாவத்த கலேவெல

சித்தி நசீமா, வரகலவத்த, கலேவெல

ரபீனா, 294/B ரன்வதியவ, கலேவெல

ஹபிலா 134, மடிப்பொல, கலேவெல

அபிவிருத்தி உத்தியோகத்தர்

S.I. பர்வினா, 448, ரன்வதியாவ, கலேவெல

மௌலவி. மொஹமட் பாரிஸ், பல்னவே, கலேவெல

**பாராளுமன்ற அறிக்கைகள்**

சனத்தொகை மதிப்பீட்டு அறிக்கை,2017. கலேவெல பிரதேச சபை.

மாத்தளை மாவட்ட தேர்தல் அலுவலக பிரிவு,2018. கச்சேரி